சமூக வலைத்தளங்களில் விமர்சனம் என்ற பெயரில்

# திரைப்படங்களை அவதூறு செய்பவர்கள் மீது போலீசில் புகார் கொடுக்கலாம் ஐகோர்ட்டு கருத்து

சென்னை, டிச.4-

விமர்சனம் என்ற பெயரில் புதிய திரைப்படங்கள் குறித்து அவதூறு பரப்புபவர்கள் மீது போலீசில் புகார் அளிக்கலாம் என்று சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

சென்னை ஐகோர்ட்டில் ஆற்றல்மிகு தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் டி.சிவலிங்கம் என்ற சிவா தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:-

## புது படங்கள் அவதூறு

எங்களது சங்கம் தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கும், மத்திய, மாநில அரசுகளுக்கும் இணைப்பு பாலமாக இருந்து வருகிறது. குறிப்பாக புதிதாக வெளியாகும் தமிழ் திரைப்படங்களின் வெற்றிகரமான வெளியீட்டுக்கும், அதன் செலவினங்கள், சட்டவிரோதமாக இணையதளங்களில் வெளியிடுவது போன்றவற்றை கட்டுப்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றி வருகிறது.சமீபகாலமாக புதிதாக வெளியாகும் திரைப்படங்களை யூ-டியூப், எக்ஸ் வலைதளப்பக்கம், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் போன்ற சமூகவலைதளங்களில் விமர்சனம் என்ற பெயரில் திட்டமிட்டு எதிர்மறையாக அவதூறு பரப்பும் சம்பவம் அதிகரித்து வருகின்றன.

## கட்டுப்பாடு இல்லை

பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களை கட்டுப்படுத்த பிரஸ் கவுன்சில் ஆப் இந்தியா மற்றும் பிராட்காஸ்டிங் பீரோ போன்ற அமைப்புகளும், திரைப்படங்களை கண்காணித்து தணிக்கை செய்ய சென்சார் போர்டு போன்ற அமைப்புகளும் உள்ளன.

ஆனால் யூ-டியூப் போன்ற சமூக வலைதளங்களில் அவதூறு பரப்புவோரை கண்காணித்து நடவடிக்கை எடுக்க எந்த கட்டுப்பாடுகளும், வழிமுறைகளும் நம்மிடம் இல்லை. இதனால் இஷ்டம் போல யார் வேண்டுமென்றாலும் திட்டமிட்டு சமூக வலைதளங்களில் அவதூறு பரப்பலாம் என்ற நிலை உருவாகியுள்ளன.

## 3 நாட்கள்...

இதுபோன்ற அவதூறு விமர்சனங்களை பார்க்கும் ரசிகர்கள் மனநிலை மாறி புதிய படங்களை பார்க்காமல் இருந்து விடுகின்றனர். இதனால், தயாரிப்பாளர்களுக்கு பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. இதுபோன்ற சூழ்நிலையினால், தமிழ் திரைப்படத்துறையில் அசாதாரண சூழல் நிலவுகிறது. எனவே, புதிதாக வெளியாகும் திரைப்படங்கள் குறித்து 3 நாட்களுக்கு மட்டும் விமர்சனம் செய்ய தடை விதிக்கவேண்டும்.

புதிய திரைப்படங்கள் குறித்து விமர்சனம் என்ற பெயரில் அவதூறு பரப்ப யூ-டியூப், எக்ஸ் வலைதளப்பக்கம், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைதளங்களுக்கும் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். இதுதொடர்பாக சட்ட விதிமுறைகளை வகுக்க மத்திய, மாநில அரசுகளுக்கும் உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறியிருந்தார்.

## நடிகர்-நடிகை

இந்த மனு நீதிபதி எஸ்.சவுந்தர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில் வக்கீல் விஜயன் சுப்பிரமணியன் ஆஜராகி, பல கோடி ரூபாய் செலவில் எடுக்கப்பட்டு வெளியிடப்படும் திரைப்படங்களை விமர்சனம் என்ற பெயரில் அவதூறு செய்து படத்தை ஓட விடாமல் தடுத்து விடுகின்றனர். அதுமட்டுமல்ல திரைப்படத்தில் நடித்த நடிகர், நடிகை, இயக்குனர் குறித்தும் அவதூறு பரப்புகின்றனர் என்று வாதிட்டார்.

இதையடுத்து நீதிபதி, விமர்சனம் என்ற பெயரில் அவதூறு பரப்பினால் அதுதொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் மீது போலீசில் புகார் அளிக்கலாம். இந்த மனுவுக்கு மத்திய, மாநில அரசுகளும், யூ-டியூப் நிறுவனமும் 4 வார காலங்களில் பதில் அளிக்க வேண்டும்" என்று உத்தரவிட்டார்.

டிஜிட்டல் மோசடிக்கு பயன்படுத்தப்பட்ட

# 59 ஆயிரம் வாட்ஸ்-அப் கணக்குகள் முடக்கம்